செ.வெ.எண்-38 நாள்-21.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் தொழிற்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் கீழப்பழூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி இணைந்து நடத்தும் தொழிற்நெறி வழிகாட்டும் கண்காட்சியினை திறந்து வைத்து, கருத்தரங்கினை குத்துவிளக்கேற்றி, மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**தொழிற்நெறி வழிக்காட்டும் கண்காட்சியினை தொடங்கி வைத்து, கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கி தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் இன்று நடைபெறும் இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பல பயனுள்ள கருத்துக்களை தனியார் துறை வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்கல்வி வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுகள் குறித்த கருத்தரங்குகள் தொடந்து நடைபெறவுள்ளன. இதனை மாணவ, மாணவியர்கள் நன்கு கூர்ந்து கவனித்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தங்களுடைய திறமைக்கேற்ப வேலை வாய்ப்பு சார்ந்த படிப்புகளை தேர்வு செய்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தமிழக அரசின் இணையதளத்தில் வேலைவாய்ப்பு தகவல்களை தினந்தோறும் கண்காணித்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அரசு வேலை வாய்ப்பு மட்டும் அல்லாமல் தனியார் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளையும் மாணவர்கள் தேர்வு செய்திட வேண்டும். தொழிற்சார்ந்த தொழிற்கல்வியை தேர்வு செய்து, திட்டமிட்டு படித்திட வேண்டும். நேர்முக தேர்வுகளை ஆக்கப்பூர்வமான சிந்தனையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

மேலும், வாசிக்கும் திறன்களை வளர்த்துக்கொண்டு, படிப்பு சார்ந்த புத்தகங்கள் மட்டுமல்லாமல் ஏனைய அறிவியல் சார்ந்த தொழிற்படிப்புகள், பொது அறிவு புத்தகங்களை படித்து, தொழிற் முனைவோர்களாக தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

சுயதொழில் தொடங்க ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்கள் மாவட்ட தொழில் மையத்தினை அணுகி தங்கள் தேவைக்கேற்ப கடனுதவி பெற்று, தலைச்சிறந்த சுயதொழில் முனைவோர்களாக உருவாக்கிக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் தயாரித்த தகவல் கையேடு என்ற புத்தகத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கி.முனியாண்டி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி, உதவி இயக்குநர் (முன்னாள் இராணுவத்தினர் நலன்) கா.குணசேகரன், அரசு தொழிற்நுட்ப கல்லூரி முதல்வர் சு.லதா மீனாட்சி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள் மு.வினோத்குமார், கு.சுந்தரவள்ளி, திறன் மேம்பாடு ஆலோசகர் கே.செல்லாக்குமார், அரசு தொழில்நுட்ப கல்லூரி விரிவுரையாளர் கே.ஜோதிநாதன், அரசு தொழில்நுட்ப கல்லூரி துறைத்தலைவர் மணிவண்ணன் மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**